இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
கல்விப்பீடம்
முன்பள்ளிக்கல்வி உயர் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் 2017/2018

**ESC2222/EPA2422 – சிறுவர் உரிமைகள்**

இறுதிப்பரீட்சை
காலம் : 03 மணித்தியாலங்கள்

திகதி: 29.12.2018 நேரம்: பி.ப 01.30 – பி.ப 04.30

பகுதி I இல் சகல வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

## பகுதி I

01. "சிறுவர் உரிமை" என்னும் பதத்தில் நீங்கள் விளங்கிக் கொள்வது யாது?

02. "சிறுவர் " என்னும் பதத்தினை எவ்வாறு வரையறுப்பீர்?

03. பிள்ளை தொடர்பாக "உரிமை", "தேவை", "கடமை" ஆகிய பதங்களை எவ்வாறு வேறுபடுத்துவீர்.

04. உங்கள் சமூகத்திலுள்ள பிள்ளைகளின் சிறந்த சுகாதாரத்தினை, உரிமையினை உறுதிப்படுத்த தடையாக அமையும் சுற்றாடல்சார் காரணிகளைப் பெயரிடுக.

05. பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு அன்பை வெளிப்படுத்த தடையாக அமையும் காரணிகள் எவை?

06. இலங்கையில் சிறுவர் உரிமையினை அறிமுகப்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் எவை?

07. இலங்கையில் சிறுவர் உரிமையினை கண்காணிக்கும் குழுக்களின் வகிபங்கு யாது?

08. இலங்கை அரசானது சிறுவர் உரிமையினை உறுதிப்படுத்தும் பட்டயத்தை ஏற்றுக்கொண்டதன் பின்னர் சிறுவர் உரிமையினை உறுதிப்படுத்துவதற்கு மேற்கொண்ட படிமுறைகள் ஐந்தினை (05) தருக.

(8×5 = 40 புள்ளிகள்)

## பகுதி II

09. பின்வரும் காலப்பகுதிகளில் இலங்கையில் "சிறுவர் உரிமைகள்" தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பிரதான செயற்பாடுகளை சுருக்கமாக விளக்குக.
(அ) காலணித்துவத்திற்கு முற்பட்ட காலம்
(ஆ) போர்த்துக்கேயர் காலம்
(இ) ஒல்லாந்தர் காலம்
(ஈ) பிரித்தானியர் காலம்

(4×5 = 20 புள்ளிகள்)

10. (i) “பங்குகொள்ளும் உரிமை” என்னும் பதத்தினை விளக்குக.
(05 புள்ளிகள்)

(ii) இலங்கையில் சிறுவர் உரிமை சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைச் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுமான “பங்குகொள்ளும் உரிமையினை விளக்குக.
(07 புள்ளிகள்)

(iii) இளம் மக்களின் முழுமையான ஆளுமையை விருத்தி செய்வற்கு தீர்மானம் எடுக்கக்கூடிய தகவல்களைச் சேகரிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தினை விளக்குக.
(08 புள்ளிகள்)

11. (i) வினைத்திறனான தொடர்பாடலுக்கு தடையாக அமையும் காரணிகளைத் தருக.
(05 புள்ளிகள்)

(ii) சிறுவர் உரிமை தொடர்பான தொடர்பாடலை முன்னேற்றுவதற்கு **ஐந்து(05)** வழிகளை பரிந்துரைக்குக.
(08 புள்ளிகள்)

(iii) சிறுவர் உரிமையினை ஊக்கப்படுத்துதலில் ஆசிரியர்களின் வகிபாங்கினை உயர்த்துவதற்கு **ஐந்து (05)** விதந்துரைப்புகளை முன்மொழிக.
(07 புள்ளிகள்)

12. (i) ஐக்கிய நாடுகள் சாசனத்தில் காணப்படும் சிறுவர் உரிமைக்கான **நான்கு (04)** பிரிவுகளும் எவை?
(04 புள்ளிகள்)

(ii) இந்த நான்கு பிரிவுகளும் ஒன்றுடன் ஒன்று எவ்வாறு தொடர்புபட்டுள்ளதென்பதை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.
(16 புள்ளிகள்)

13. (i) “வளர்ச்சிக்கும் விருத்திக்குமான உரிமை” என்னும் பதத்தினை விளக்குக.
(05 புள்ளிகள்)

(ii) பெற்றோர், முன்பள்ளி ஆசிரியர், நாட்பராமரிப்பாளர்கள் என்போர் பிள்ளையின் வளர்ச்சிக்கும் விருத்திக்குமான உரிமையை உறுதிப்படுத்துவதில் எவ்வாறு ~~பங்பளிப்புச்~~ செய்ய முடியும் என விளக்குக.
பங்களிப்பு
(15 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது